தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம்

செய்தி வெளியீட்டு எண்: 125 / 2026 **நாள்**: 29.10.2026

செய்தி வெளியீடு

தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தின் அறிவிக்கை எண்: 11/2024, நாள் 13.08.2024 இல் அறிவிக்கப்பட்ட ஒருங்கிணைந்த தொழில்நுட்பப்பணிகள் தேர்வில் (பட்டயம் /தொழிற்பயிற்சி நிலை) அடங்கிய பதவிகளுக்கான காலிப்பணியிடங்களில் நேரடி நியமனம் செய்வதற்கு தேர்வர்களால்பதிவேற்றம் செய்யப்பட்ட சான்றிதழ்கள் / ஆவணங்கள் சரிபார்க்கப்பட்டன. சரிபார்ப்புக்குப் பின்னர், சில சான்றிதழ்கள் / ஆவணங்கள் முழுமையாக / சரியாக பதிவேற்றம் செய்யப்படாமல் / குறைபாட்டுடன் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது:

2) எனவே, இத்தகைய தேர்வர்கள் **30.10.2026 முதல் 08..11.2026 வரை (இரவு 11.59 மணிக்குள்)** விடுபட்ட மற்றும் முழுமையான சான்றிதழ்களை /ஆவணங்களை மீள்பதிவேற்றம் செய்ய/குறைகளை சரிசெய்ய இறுதி வாய்ப்பு வழங்கப்படுகிறது. மேற்படி தேர்வர்களின் பதிவெண்களைக் கொண்ட பட்டியல் தேர்வாணையத்தின் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. இதுதொடர்பான குறிப்பாணை, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. இத்தகவல், அத்தேர்வர்களுக்கு குறுஞ்செய்தி, மின்னஞ்சல், ஆகியவற்றின் வாயிலாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

3) மேலும், அத்தேர்வர்கள் அனைவரும் குறிப்பாணையில் தெரிவிக்கப்பட்டுள்ள சான்றிதழ்களை / ஆவணங்களை தேர்வாணைய இணையதளத்தில் அவர்களுடைய ஒருமுறை பதிவுக்கணக்கின்(OTR Account) வாயிலாக பதிவேற்றம் செய்ய அறிவுறுத்தப்படுகிறார்கள்.

4) அவ்வாறு செய்யத்தவறும் பட்சத்தில், அத்தகைய தேர்வர்களின் உரிமைகோரல் (claim) / விண்ணப்பம் நிராகரிக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

செயலாளர்

திரு. பானோத் ம்ருகேந்தர் லால், இ.ஆ.ப.